**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>எம்.சி.ஓ.பி.எண் 248/2021</u>**
**<u>நாள் 30/07/2025 புதன்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – சரவணன் | த/பெயர் – மூர்த்தி |
| வயது – 27 | தொழில் – |
| விலாசம் – கல்லூர் கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**<u>முதல் விசாரணை–</u>**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். மனுதாரர்தரப்பு சான்றாவணங்கள் கீழ்க்கண்டவாறு குறியீடு செய்யப்படுகிறது.

1. (1). 17.08.2016 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல் **ம.சா ஆ 1** ஆகவும்,

(2). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல் **ம.சா ஆ 2** ஆகவும்,

(3). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன காப்பீட்டு நகல் **ம.சா ஆ 3** ஆகவும்,

(4). சதிஷ் என்பவரின் ஓட்டுநர் உாிமம் நகல் **ம.சா ஆ 4** ஆகவும்,

(5). மருத்துவ விடுவிப்பு அறிக்கை **ம.சா ஆ 5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1. நான் மேற்படி மனுவை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாகன விபத்தில் இழப்பீடு கேட்டு தாக்கல் செய்துள்ளேன். விபத்து எந்த தேதியில் எங்கு நடந்தது என்றால் 16.08.2016 அன்று காலை 08.45 மணியளவில் ஓமசமுத்திரம் கிராமத்தில் நடந்தது. எப்படி எனக்கு விபத்து ஏற்ப்பட்டது என்றால் பேருந்தில் இருந்து இறங்கும் சமயத்தில் நான் இறங்குவதை கவனிக்காமல் பேருந்தின் ஓட்டுநர் அந்த பேருந்தை வேகமாக இயக்கியதால் பின்பக்க டயர் கால் மீது ஏறி விபத்து ஏற்ப்பட்டது. விபத்து ஏற்ப்படுத்திய பேருந்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியும் TN 21 A 2799 ஆகும். விபத்து நடந்தவுடன் எந்த மருத்துவமனை சென்று முதல் உதவி சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் முதல் உதவி சிகிச்சை பொன்னேரியிலும் மேற்ச்சிகிச்சைக்காக ஸ்டேன்லி மருத்துவமனையிலும் சிகிச்சை எடுத்தேன். ஸ்டேன்லி அரசு மருத்துவ மனையில் 2 வாரங்கள் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அங்கு எனக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதா என்றால் இல்லை.

2. விபத்தில் எனக்கு என்ன காயம் ஏற்ப்பட்டது என்றால் இடது கால் நசுங்கிவிட்டது, தகடு ஏதேனும் பொருத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை. விபத்து குறித்து காவல் நிலையத்தில் யாா் புகார் கொடுத்தது என்றால் எனது சித்தப்பா பூபாலன் என்பவர் கொடுத்தார். ஒரு நாள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு எவ்வளவு வயது என்றால் 18 வயது ஆகும். விபத்து நடந்த சமயத்தில் நான் அரசு மேல்நிலைப்பள்ளி, சுண்ணாம்புகுளத்தில் 12ம் வகுப்பு படித்துக்கொண்டு இருந்தேன். எனது வயதையும், படிப்பையும் நிரூபிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த விபத்து சம்மந்தமாக குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் ஏதேனும் அளித்துள்ளேனா என்றால் இல்லை.

3. நான் தாக்கல் செய்துள்ள ம.சா ஆ 5 ஆவணத்தின் படி எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என மருத்துவர் கூறியுள்ளார் என்றால் சரிதான், நான் படிக்கட்டில் நின்று பயணம் செய்தேன் என்றும் பஸ் நிறுத்தம் இல்லாத இடத்தில் ஓடும் பேருந்தில் இருந்து இறங்கிய போது தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது அஜாகிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் நான் கவனமாக இருந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றும் படிக்கட்டில் பயணம் செய்ததால் தான் கீழே விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு தற்போது எவ்வளவு வயதாகிறது என்றால் 27 வயது ஆகிறது. என்ன வேலை செய்கிறேன் என்றால் ஜனப்பசத்திரத்தில் உள்ள மொபைல் கடையில் வேலை செய்கிறேன். மாத சம்பளம் ரூபாய் 22,000/- ஆகும்.

4. விபத்தின் போது நான் வேலைக்கு செல்லவில்லை என்றும் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றுள்ளேன் என்றும் மருத்துவ செலவுகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தற்போது எனக்கு எந்த இயலாமையும் உடலில் இல்லாத காரணத்தினால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. மனுவில் பல்வேறு தலைப்புகளின் கீழ் எவ்வளவு இழப்பீடு கேட்டுள்ளேன் என்றால் 5,00,000/- கேட்டுள்ளேன். எனக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்பகாயம் என்றும் அதுவும் சரியாகிவிட்டது என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**